


# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter

# குருதீபம்
## ගුරුදීපම්
## Gurutheepam

மே - 2021

இதழ் - 25



## பீடாதிபதியின் செய்தி

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் 21 வருட நிறைவில் 25 வது குருதீபம் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

முதலில் எந்தவித இடையூறும் இன்றி குறித்த திகதியில் குருதீபம் வெளிவருவதில் மகிழ்ச்சியடைவதுடன்,இறைவனுக்கு நன்றி கூறுவதுடன், இம்முயற்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி எதையும் திட்டமிட்டு முறைப்படி செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் செயற்படும் சிரேஸ்ட விரிவுரையாளர் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றும் ஆசிரிய கல்வியியலாளர் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.

2019 மே மாதம் 02 ஆம் திகதி வித்தக விநாயகர் முன்னிலையில் ஆரம்பமான எமது குருதீபத்தின் பயணம், பல கல்லூரிகளுக்கும் நிறுவனங்களுக்கும் முன்மாதிரியாக... வன் பிரதியாக ஆரம்பிக்கப்பட்ட குருதீபம், இன்று மென்பிரதியாக உலகெங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் செயற்பாடுகளையும் சாதனைகளையும் கொண்டு சென்று சேர்ப்பதில் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

COVID -19 தொற்று நோய் அனைத்து சமூக - பொருளாதார மற்றும் அரசியல் களங்களிலும் மிகப் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. முன்பள்ளிகள் தொடக்கம் பாடசாலைகள், கல்வியியற் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் அதிக ஆபத்து நிறைந்த சூழல் காரணமாக உலகளாவிய கல்வி முறைகள் நிறுத்தப்பட்டதன் விளைவாக ஒரு கடினமான பணி அரசு மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ளது. கல்வியாளர்களும் கற்பவர்களும் தனிப்பட்ட பாடத் திட்டங்களின் தரம் மற்றும் கல்வியின் தரமேம்பாட்டைப் பேணுதல் போன்ற சவால்களுக்கு மத்தியில் எதிர்கால போக்குகள் மற்றும் கல்விச் சீர்திருத்தம் பற்றி, இக்கல்வி சீர்திருத்தம் நடைமுறைக்கு வரும்போது ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குச் சாத்தியமான தீர்வுகள் பற்றி விவாதிப்பது அவசியமாகும்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி கொவிட் சவால்களுக்கு மத்தியியல் சமகாலத்தில் தன்னால் இயன்ற கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள், இணைப்பாட விதானச் செயற்பாடுகள், வாண்மை விருத்திச் செயற்பாடுகள், மாணவர் புத்தாக்கச் செயற்பாடுகள் என பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளது. எமது உப பீடாதிபதிகள். விரிவுரையாளர்-இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்களின் பங்களிப்புடனும் கல்விசாராப் பணியாளர்களின் ஒத்துழைப்புடனும் பல்வேறு சாதனைகள் ஏற்படுத்தப்பட்டது.

சமூக மாற்றத்திற்கான கருவி கல்வியாக அமையும் போது, அந்த கல்வியை வழங்கும் ஆசிரியர்களும் அவர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனங்களும் இற்றைப்படுத்தப்பட வேண்டியதுடன் எதிர்கால சவால்களை கையாளக் கூடிய ஆற்றல்களை பெற்றுக் கொள்ள வேண்டியதாகவுள்ளது. கடந்த ஒரு வருட காலத்தில் மாணவர்கள் கேட்டல் மூலமும் பார்த்தல் மூலமும் பெற்ற கல்வியை எதிர் காலத்தில் அனுபவங்களின் மூலம் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் அதே நேரத்தில் குறித்த வகுப்பு பாட விதானத்தையும் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதேவேளை கற்றல் இழப்பிற்கு உள்ளாகிய மாணவர்களைக் கையாள வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது.

கல்வியியல் கல்லூரிகளில் இருந்து வெளியேறும் ஆசிரியர்களின் வாண்மைத்துவத்திற்கு பிரதான காரணமாக அமைவதில் வதிவிடப் பயிற்சியே முக்கிய பங்களிப்புச் செய்கின்றது. கடந்த ஒரு வருடம் வதிவிடப் பயிற்சியும் சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு காலத்திற்கு காலம் சவாலுக்குட்படும் கல்வி முறைமையானது எதிர்காலத்தில் பாரிய பின்னடைவுகளை எதிர் கொள்ள வழியேற்படுத்துகின்றது.

எனவே மாணவ ஆசிரியர்கள் சுய வழிப்படுத்தப்பட்ட கற்றல் மூலம் இச்சவால்களையெல்லாம் வெற்றி கொள்ளக் கூடிய வாண்மைத்துவ மிக்க ஆசிரியர்களாக எதிர்கால ஆசிரியர்களாக மிளிர தற்போதிருந்தே செயலாற்ற வேண்டுமென்றும், அதற்கு ஆசிரிய கல்வியியலாளர்கள் துணை புரிந்து வழிகாட்ட வேண்டுமென்றும் இச்சந்தர்ப்பத்திலே எல்லோரையும் கேட்டுக் கொள்வதுடன் எதிர்காலம் சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

## குருதீபம் 25வது சிறப்பிதழ்!

02.05.2019 அன்று 19வது கல்லூரி தினத்தில் தனது பயணத்தை ஆரம்பித்த குருதீபம் செய்தி மடலானது இன்றைய தினம் 21வது கல்லூரி தினத்தில் தனது 25வது இதழை முகிழ்த்து ஒளி வீசுகின்றது.

இக்கட்டான பல சந்தர்ப்பங்களிலும் குருதீபத்தின் பயணத்திற்கு உந்து சக்தியாகவிருந்து ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குகின்ற கல்லூரியின் பீடாதிபதி திரு.சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் கல்லூரியின் கல்விசார் பணியாளர்கள், கல்வி சாராப் பணியாளர்கள், மாணவஆசிரியர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், எமது பழைய மாணவர்கள்,எல்லோருக்கும் மேலாக குருதீபத்தைத் தொடர்ந்து வாசித்து தமது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்கின்ற வாசகர்கள் மற்றும் அபிமானிகள் அவைருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குருதீபம் ஆசிரியர் குழுவினர்.**

### *போசகர்*

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

### *ஆலோசகர்கள்*

செல்வி.செ.செல்வமலர்
திரு.தி.ஜெயகாண்டீபன்
திருமதி.செ.சிவபாதம்

உப பீடாதிபதிகள்

### *பிரதம ஆசிரியர்*

திரு.ம.நிரேஸ்குமார்

### *இணை ஆசிரியர்கள்*

திரு.சி.முகுந்தன்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

### *வெளியீடு*


யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk


## திரு.தி.ஜெயகாண்டீபன், உப பீடாதிபதி (நிதியும் நிர்வாகமும்) அவர்களின் ஆசிச் செய்தி



இருபத்தொராவது ஆண்டில் வெற்றிகரமாக காலடி எடுத்து வைக்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியை முதற்கண் வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

நான்கு பீடாதிபதிகளின் அயராத முயற்சியினால் வளர்ச்சி கண்ட இக்கல்லூரி நான்காவது பீடாதிபதியாம் திருவாளர் சுப்பிரமணியம் பரமானந்தம் தலைமையிலான காலப்பகுதியில் தற்போது பல சவால்களுக்கு மத்தியிலும் சாதனைகளை நிலை நாட்டி வருகின்றது. இத்தருணத்தில் எமது கல்லூரியின் பீடாதிபதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். அவரது பிரதி பலன் பாராத சேவை தொடர்ந்தும் கல்லூரிக்கு கிடைக்க வேண்டும் என எல்லாம் வல்ல வித்தக விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

மாற்றம் என்னிலிருந்தே, நல்லதே நடக்கும், ஒரே அணி ஒரே இலக்கு என்ற மகுட வாசகங்களை மந்திரமாக கொண்டு கல்லூரிப்பணியாளர்களை வெற்றி எனும் கலங்கரை விளக்கினை நோக்கி அழைத்துச் செல்லும் தலைமைத்துவத்திற்கு தலை வணங்குகின்றேன். மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும் உபபீடாதிபதிகள், விரிவுரைஇணைப்பாளர்கள், சிரேஸ்ட விரிவுரை யாளர்கள் மற்றும் ஆசிரிய கல்வியியலாளர்கள் கல்லூரியின் வளர்ச்சிக்கு இடையூறாகும் தடைக் கற்களை உடைத்தெறியும் ஆற்றலை பெருமையுடன் காண்கின்றேன்.

விமர்சனங்கள், புறம் பேசுகைகள், முகஸ்துதிகளை படிக் கற்களாக்கி மிதித்தெழுந்து முன்னேறும் கல்லூரி இக்கட்டான அனர்த்த நிலையிலும் எல்லோரையும் திரும்பிப் பார்க்கும் வகையில் வீறுநடை போட உழைக்கும் பீடாதிபதி, கல்விசார், கல்விசாராப் பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவைக்காக அனைவரையும் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

கல்லூரியின் வளர்ச்சியை பதிவுகளாக்கி மலரும் பல்வேறு மலர்களில் குருதீபம் செய்திமடல் தனித்தன்மை கொண்டது. கல்லூரியின் வெற்றிகளை பதிவு செய்து கல்லூரிப் பணியாளர் களையும் சமூக ஆர்வலர்களையும் பார்த்துப் பார்த்து மகிழ வைக்கும் குருதீபம் தனது மங்கள ஒளியில் கல்லூரித்தாயை அர்ச்சிக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.

எத்தடை வரினும் அத்தடை உடைத்து வெளிவரும் குரு- தீபத்தின் ஒளியினை ஏற்றும்... பீடாதிபதி திரு.சு.பரமானந்தம் அவர்களின் வழிகாட்டலில்... அதன் பிரதம ஆசிரியர் திரு. மகாலிங்கம் நிரேஸ்குமார் அவர்களின் அயராத முயற்சிகளை பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் மகிழ்வடைகின்றேன்.

கல்லூரியின் அனைத்து நிகழ்வுகளையும் நிழற் பதிவுகளாய் ஒழுங்குபடுத்திப் பதிவு செய்யும் பணியின் பின்னால் உள்ள கடின உழைப்பு கல்லூரியின் வளர்ச்சிக்கு உரமாகும். அதனை குறைவின்றி வளங்கும் நல்ல விவசாயி ஆசிரிய கல்வியிய லாளர் திரு. மகாலிங்கம் நிரேஸ்குமார் அவர்களையும் குரு- தீபம் செய்தி மடலின் ஆசிரியர் குழாத்தினர் அனைவரையும் அன்புடன் வாழ்த்துவதிலும் ஆசி கூறுவதிலும் பாராட்டுவதிலும் மன மகிழ்வடைகின்றேன்.

**திரு.தி.ஜெயகாண்டீபன்**
**உபபீடாதிபதி (நிதியும் நிர்வாகமும்)**
***யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.***

## செல்வி செ.செல்வமலர், உப பீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்) அவர்களின் ஆசிச் செய்தி



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தனது 21 வருட காலத்தை நிறைவு செய்கின்ற நாளில் வெளி வருகின்ற **"குருதீபம்"** செய்தி மடலுக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு பேருவகை அடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சியை பறை சாற்றக் கூடிய வகையில் கல்லூரியில் இடம்பெறும் வினைத்திறன் மிக்க செயற்பாடுகள், சாதனைகள் யாவற்றையும் காலத்தால் அழியாதனவாய் எடுத்தியம்பும் ஓர் அற்புதமான வெளியீடே **"குருதீபம்"** எனக் கூறின் மிகையாகாது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளைப் பேணிப் பாதுகாக்கும் பின்புலத்தில் வெளி- வருகின்ற இச் செய்திமடல் மேலும் தன் பணிகளை விஸ்தரித்து கல்லூரியின் புகழை உலகறியச் செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதன் வெற்றிப் பயணத்தில் பங்கு கொண்டு தம்மை அர்ப்பணித்து பணியாற்றுகின்ற சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் அவர் களுக்கும் அவருடன் இணைந்து பணியாற்றுகின்ற அனைத்து ஆசிரிய கல்வியியலாளர்களுக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

இச் செய்திமடல் கல்லூரியின் செயற்பாட்டாளர்களை ஊக்குவிக்கும் வகையில் இன்னும் பல ஆண்டுகள் தனது பயணத்தைத் தடையின்றித் தொடர வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

**செல்வி.செ.செல்வமலர்**
**உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)**
***யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.***

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "குருதீபம்" செய்திமடலின் 25வது சிறப்பிதழ்! 19வது கல்லூரி தினத்தில் தனது முதலாவது இதழை முகிழ்த்த குருதீபம் இன்று 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.**

## Message form Mrs.S.Sivapatham, Vice President (Continue Education)



It gives me great pleasure to write this message to the golden issue of "Gurutheepam" published by JNCoE.

Education is the most valuable asset of our community. As the monthly issue "Gurutheepam" provides opportunities to enhance students' creative talents. This issue portrays what is happening in our college and inculcates social concern among the students.

I wish you to rise many more years and take this opportunity to congratulate Mr.M.Nireshkumar and the team in charge of releasing this issue.

**Mrs.S.Sivapatham**
**Vice President (Continue Education)**

## முன்னாள் பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி



கல்லூரியின் இருபத்தோராம் நூற்றாண்டை ஒட்டி வெளிவருகின்ற 25 ஆவது குருதீபம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரியில் 6 ஆண்டுகள் பீடாதிபதியாக கடமை யாற்றினேன் என்ற மகிழ்ச்சி என்மனதில் என்றும் இருந்து கொண்டேயிருக்கும். அங்கு விரிவுரையாளர் குழாம், கல்விசாரா உத்தியோகஸ்தர்கள் குழாம், ஒரே அணியாக - குடும்பமாக கல்லூரியின் வளர்ச்சியில் மிக அக்கறை யோடு செயற்பட்டனர். இதனால்தான் எல்லாக் கல்லூரிக ளையும் விட எமது கல்லூரி முதல்நிலையில் இருப்ப தோடு சகல தரப்பினராலும் மெய்ச்சத்தக்க வகையில் அமைந்தது. இதற்கு முன்னாள், இந்நாள் பீடாதிபதிகள், கல்வி சார் உத்தியோகஸ்தர்கள், கல்விசார உத்தியோ கஸ்தர்கள், மாணவர்கள் போன்றோரின் அர்ப்பணிப்பான செயற்பாடென்றால் மிகையாகாது.

இக்கல்லூரித்தாய் பலரை வளர்த்தெடுத்திருக்கிறாள். யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளிலும், பாடப் புறச் செயற்பாடுகளிலும், ஒழுக்க விழுமியங்களை கடைப் பிடிப்பதிலும், கல்லூரிக ளுக்கிடையே நடைபெறுகின்ற செயற்பாடுகளில் கல்லூரி க்கு நற்பெயரைத் தேடித் தருவதிலும், உள்ளூரிலும், வெளி நாடுகளிலும் பலர் பங்களிப்பதுடன் உயர் பதவி-களை அலங்கரித்து கல்லூரிக்கு பெருமை தேடித் தருகி ன்றனர். இதுமாத்திரமல்லாமல் பல பாசாலைகள் எமது கல்லூரி மாணவர்களை விரும்பி கேட்டுப் பெற்றிருப் பதும் இதற்குச் சான்றாகும்.

இன்றும் கூட எமது மாணவர்கள் இணைய வழி கற்பித்த லில் நாடளாவிய ரீதியில் மிளிர்ந்து கொண்டு இருப்பதன் ஊடாக கல்லூரிக்கு பெருமை தேடித் தந்து கொண்டிருக் கிறார்கள். இறுதியாக வந்த பெறுபேற்றில் கூட 9 மாணவர்கள் அதி திறமைச் சித்தி பெற்று கல்லூரிக்கு பெருமை தேடித் தந்தது கல்லூரியின் வளர்ச்சிப் போக்கை தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

கல்லூரியின் வெற்றியில் கல்வியியலாளர்கள் தமது கற்பித்தல் செயற்பாடுகளோடு மாத்திரம் நிற்காமல் நிர்வாகம் தொடர்பான செயற்பாடுகளிலும் முழு ஒத்துழைப்பை வழங்குவதும் நேர காலம் பார்க்காமல் இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபடுவதும் கல்வி சாரா உத்தியோகஸ்தர்கள் தமது நியமனக் கடிதத்திற்கு மேலதிகமாக ஏனைய வேலைகளைச் செய்பவராகவும் காணப்படுதல் காரணமாக அமைகிறது.

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்று கல்விசார் உத்தியோகஸ்தர்களும், கல்விசார உத்தியோகஸ்தர்களும் இணைந்து தொடர்ச்சியாக பணியாற்றியமையும் மாணவர்களின் தேர்ச்சித் திறமைக்கும் இக்கல்லூரின் வளர்ச்சிக்கும் காரணமாக அமைந்துள்ளது. இது தொடர எல்லாம் வல்ல கல்லூரியின் வித்தக விநாயகரும் முடி மன்னர் வைரவரும் நிச்சயம் உறுதுணையாக இருப்பர்.

கல்லூரியின் 21ஆவது ஆண்டில் வெளியிடப்படும் 25 ஆவது குருதீபம் மலர் சிறப்பாக வெளி வரவும், அதன் நோக்கங்கள் வெற்றி பெறவும் கல்லூரி மேலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்துவதுடன் இம்முயற்சியில் ஈடுபடும் கல்லூரியின் பீடாதிபதி திரு.சு. பரமானந்தம் மற்றும் மலர்க்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக் களும் உரித்தாகட்டும்

**கலாநிதி ச.அமிர்தலிங்கம்**
**முன்னாள் பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

## வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் குருதீபம் மாதாந்த சஞ்சிகையின் 25வது வெளியீடானது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தினத்தில் வெளி வருவதை யிட்டு மிகவும் மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகின்றேன்.

அதே வேளை இம்மாதாந்த சஞ்சிகையினை மிகவும் சிறப்பாக நெறிப்படுத்தி வழிப்படுத்தும் பீடாதிபதி உயர்திரு.சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுக்கும் முழுமையான ஈடுபாடு காட்டி செயற்பட்டு வரும் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் அவர்களுக்கும் ஏனைய மலர்குழு உறுப்பினர்கள், உபபீடாதிபதிகள், விரிவுரையா ளர்கள் மற்றும் முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் தங்கள் ஒத்துழைப்புக்கு நன்றி கூறுவதுடன் தொடர்ச்சியாக குருதீபம் கல்விச் செருக்கோடு வெளிவர வேண்டும் என வித்தக விநாயகர் மற்றும் முடிமன்னன் வைரவரை வேண்டிப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

**திரு.சி.முகுந்தன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "குருதீபம்" செய்திமடலின் 25வது சிறப்பிதழ்! 19வது கல்லூரி தினத்தில் தனது முதலாவது இதழை முகிழ்த்த குருதீபம் இன்று 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.**

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலைப் பீடாதிபதி திரு.க.பேர்ணாட் அவர்களின் வாழ்த்துச் செய்தி!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சிப் படிகள் அதனது தரத்தை உறுதிப் படுத்தும் சான்றுகள் பலவுள்ளன. அவற்றில் குரு-தீபமும் ஒன்று. இதனை யாராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாது. ஒரு வெளியீட்டைக் கொண்டு வருவது எவ்வளவு கடினம் என்பது எனது அனுபவம். கடினமான பாதைகளினூடாக குருதீபம் பயணம் செய்து 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழில் காலடி எடுத்து வைப்பது தொடர்பாக எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வரலாற்றுத் தடத்தில் அழியாத இடம் பெறுகின்ற பீடாதிபதி திரு சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களுக்கும் அவரது முயற்சிகளுக்கும் உடன் பயணித்து உதவும் கல்விசார், கல்விசாராப் பணியாளர்களுக்கும் மாணவ ஆசிரியர்களுக்கும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும். கல்விசார், கல்விசாராப் பணியாளர்கள் மற்றும் மாணவ ஆசிரி யர்களின் உடனிருப் பின்றி எதுவும் செய்ய முடியாது என்பது எனது அனுபவம். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இன்னும் வெற்றிப் படிகளில் கால் பதித்து முன்னேற இறையாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.க.பேர்ணாட்**
**ஓய்வு நிலைப் பீடாதிபதி**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**

## குருதீபம் - இருத்தைந்தாவது சாதனை இதழ்!

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி எமது பீடாதிபதி உயர்திரு. சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்களின் வழிகாட்டலில் இக்கட்டான கொரோனா வைரஸ் தாக்கத்தின் காலகட்டத்திலும் பல சாதனை-களைச் செய்து முன்மாதிரியான தேசிய கல்வியியற் கல்லூரியாக மிளிர்கின்றது. அதன் ஒரு பரிணாம மாக குருதீபம் இருபத்தைந்தாவது இதழ் வெளி-வருகின்றது. கல்லூரியின் சாதனைகளை ஆவணப் படுத்தும் இவ்விதழ் மிகச் சிறப்பாக வெளிவருவத ற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றும் இதழாசிரியர் திரு.மகாலிங்கம் நிரேஸ்குமார் அவர்களைப் பாராட்டுகின்றேன். அவருடன் இணைந்து செயற்படுகின்ற ஏனைய மலர்குழு உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுக்குரி யவர்கள். உப பீடாதிபதிகள், இணைப்பாளர்கள் விரிவுரையாளர்கள், கல்விசாராப் பணியாளர்கள் மற்றும் மாணவ ஆசிரியர்கள் அனைவரும் தமது கடமைகளைச் சரியாக உணர்ந்து செயலாற்றியுள் ளார்கள். ஆசிரியர் பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக் கெல்லாம் முன்மாதிரியாக விளங்குகின்ற எமது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் குரு-தீபம் செய்திப் பத்திரிகையானது தொடர்ந்தும் வெளி-வர வேண்டும், எமது கல்லூரியின் புகழை உலக மெல்லாம் அறியச் செய்ய வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**கலாநிதி பா.தனபாலன்**
**முதுநிலை விரிவுரையாளர்.**

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலைப் பீடாதிபதி திரு.எஸ்.கே.யோகநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி!

மாணவ ஆசிரிய பயிலுனர்களினதும் கல்வியியலாளர் களினதும் தனித் திறமைகள் புத்தாக்கங்கள், கண்டு பிடிப்புக்கள் அனுபவங்கள் ஆகியவற்றை மற்றவர் களுடன் பகிர்ந்து கொள்ள "குருதீபம்" மாதாந்த சஞ்சிகை களம் அமைத்துக் கொடுத்துள்ளது.ஒவ்வொ ருவரிடமும் ஏதோ தனித் திறமைகள் இருக்கத்தான் செய்யும். அவற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதால் அத்திறமையை மேலும் மெருகுற செய்ய முடியும்.

வெவ்வேறு துறைகளில் பயிற்சி பெறும் மாணவ ஆசிரியர்கள் தமது துறை சார்ந்த ஆக்கங்கள் மட்டும் அன்றி ஏனைய துறைகளிலும் திறமைாளர்களாக இருக்க முடியும். அத்திறன்களை வெளிக் கொணரும் களமாக "குருதீபம்" அமைகிறது.

ஒவ்வொரு மாதமும் கல்லூரியில் இடம் பெறும் நிகழ்வுகளையும் அந்நிகழ்விற்கு காரணமாக இருந்த வர்களையும் இவ்விதழில் இடம் பெற செய்வதால் மற்றவர்களும் தாமும் இவ்விதழிற்கு ஆக்கங்களை வழங்க வேண்டும் என்ற அவாவினை ஏற்படுத்தும். எல்லோரிடமும் துலங்கல்களை ஏற்படுத்தலாம் என்ற பீடாதிபதி யின் மேலான எண்ணமே குருதீபம் இதழ் ஆகும்.

"குருதீபம்" இருபத்தைந்தாவது இதழ் என்பது மிகப் பெரிய விடயம். நான் பல இதழ்களை படிக்கும் சந்தர்ப்பங்களை பெற்றுள்ளேன். அதில் மாணவர்களி ன் தேடல்களை படங்களாகவும் கண்டு வியப்படைந்து உள்ளேன்.

இச்சஞ்சிகை எல்லோருக்கும் பயனுள்ள தகவல்களை வழங்குகிறது. இவ்விதழின் ஆசிரிய குழுவிற்கும் வழி நடத்தி செல்லும் பீடாதிபதிக்கும் வாழ்த்துக்கள்.

**திரு.எஸ்.கே.யோகநாதன்**
**முன்னாள் பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd May 2021

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "குருதீபம்" செய்திமடலின் 25வது சிறப்பிதழ்! 19வது கல்லூரி தினத்தில் தனது முதலாவது இதழை முகிழ்த்த குருதீபம் இன்று 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.**

## வித்தகரி ஞானமணி இரத்தினசிங்கம், ஓய்வுநிலை விரிவுரையாளர் அவர்களின் ஆசிக் கவி!

வெள்ளி விழா மலராக வெளிவரும் குருதீபம்,
கால ஓட்டத்தில் அணையா ஒளிதீபம்.
புள்ளி விடயங்களைத் தாங்கி வரும் வேதம்.
நீல ஒளி வானமென நிமிர்க, களி கூர்க.
தள்ளி நாம் அமர்ந்திருந்தோம் தாயவளை விட்டு,
பாலமென நீயிருந்தாய் பலரையும் இணைத்து.
வெள்ளி முளைத்ததிங்கு வேளையினி வருமே.
காலமது கைகூடி கல்லூரி நுழைய.

**வித்தகரி. ஞானமணி இரத்தினசிங்கம்**
**ஓய்வுநிலை விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## என்றும் ஒளிர்க குருதீபம்!

சிந்தனை சொல் செயல்
மகுட வாக்கியமாய்
மனங்களில் இருத்தி
மானிடம் வளர்த்திட
மாண்புமிகு ஆசிரியம்
வளர்த்திடும்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரி புகழ் மிளிர
அறிவின் ஆற்றல்களை
ஆசிரியர் ஆக்கங்களாய்
கல்லூரி நிகழ்வுகள் யாவும்
அழகிய படங்களாக
சித்தரித்து சிறப்பாக
அவனி எங்கும் பறைசாற்ற
திங்கள் ஒரு "குருதீபம்"
கல்லூாயில் மலர்க
வளர்க வளர்க என்றும்
ஒளிர்க ஒளிர்க என்றும்
எல்லாம் வல்ல இறையாசியுடன்!

**செல்வி தி.இந்துரேகா**
**விரிவுரையாளர்.**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## கல்லூரித் தாய்க்கு வாழ்த்து!

இன்று பிறந்தநாள் காணும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இனிய வாழ்த்துக்கள். இருபத்தொரு வயதுக் குமரியாக மிளிரும் இவள் 6000 குழந்தைகளை சீரிய ஆசிரியர் பணி புரிய நாடெங்கும் அனுப்பி விட்டாள். வைகாசி 02, 2000 அன்று கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இவள் பிறந்தபோது நான் மாணவ தலைவனாக இருந்து இவள் பிறப்புக்கு என்னால் ஆன உதவிகளைச் செய்தேன். இன்று இங்கு விரிவுரையாளராக இருப்பதும் எனக்கு மகிழ்ச்சியே! யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி என்றும் ஓங்கி வளரவும் மங்காப் புகழோடு மிளிரவும் வித்தக விநாயகரின் ஆசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**திரு.துரைராசா இளங்குமரன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

## வாழ்த்துக் கவி!

எவ்வளவு தான் மேகம் மூடினாலும்
வெளிவரும் நேரம் வரும்போது
நிச்சயம் வெளிவரும் சூரியன்...
அதுபோல தான் எவ்வளவு தடைகள் வந்தாலும்
வர வேண்டிய தருணத்தில்
தப்பாமல் வெளிவரும் குருதீபம்!
வெற்றிக்கும் தோல்விக்கும் சிறு வித்தியாசம் தான்
கடமையை செய்தால் வெற்றி
கடமைக்கு செய்தால் தோல்வி
கடமையை கடுமையாக ஆற்றி
கல்லூரியின் வரலாற்று ஆவணப் பதிவாக விளங்கும்
குருதீபமே வாழ்க பல்லாண்டு!

**திருமதி. சுதா விக்னமோகன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd May 2021

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "குருதீபம்" செய்திமடலின் 25வது சிறப்பிதழ்! 19வது கல்லூரி தினத்தில் தனது முதலாவது இதழை முகிழ்த்த குருதீபம் இன்று 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

## வாழிய என்றும் வாழியவே!

கல்லூரியின் செய்திகளை
முறை தவறாது
மாதந் தோறும்
தாங்கி வரும்
பொக்கிஷமே!
ஞாலம் போற்றும்
ஞான தீபமே!
முன்பு போல
பிரதான மண்டபத்தில்
விரைவாக நீ
வெளி வர
வேண்டும் என
இந்த இருபத்தைந்தாம்
இதழில்
இறைஞ்சுகின்றேன்
இறைவனிடம்
வாழிய என்றும்
வாழிய வாழியவே!

திரு.அம்பலவாணமர் லோகநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

## Dear Mother JNCOE

Congratulations on your well - deserved success!
With each passing year you
bring creativity and professionalism in all of us
make everybody to uphold their values and visions
May you continue the journey of success with pride!
Let's celebrate the 21st blissful and charming anniversary!!

Mrs. Cinthuja Gowsigan
Lecturer
Jaffna National College of Education.

## குருதீபம் வளர வாழ்த்துவோம்!

எங்கள் கல்வியியற் கல்லூரி என்றும் சிறப்புக்குரிய கல்லூரி. இக்கல்லூரி 21வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. தற்போது எம் கல்லூரி கொரோனவினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்கின்றது. இந்தக் காலத்திலும் எங்கள் பீடாதிபதியினால் உருவாக்கப்பட்ட குருதீபம் இருபத்தைந்தாவது இதழாக வெளி வருகின்றது. இச் சஞ்சிகை கல்லூரியின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றது. இது தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என வாழ்த்துவதுடன் வித்தக விநாயகரின் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

திருமதி. விக்னேஷ்வரி நரேந்திரா
சிரேஷ்ட விரிவுரையாளர்.

அருமையான படைப்பு - குருதீப
ஆசிரியர் குழு உழைப்பு
இனிமையான பகுதிகள் - இவை
ஈத்துவக்கும் அறிஞர்கள்
உறைய வைக்கும் வண்ணங்கள் - அந்த
ஊடகத்தின் மேன்மைகள்
எண்ணிலா வாசகர்கள் - எவரையும்
ஏங்க வைக்கும் கவிதைகள்
ஐயமில்லாப் புகழ் - பாரில்
ஔடதத்தின் நிகர்
ஒப்பற்ற பதிவு - ஒய்யார
ஓர்ஈராண்டின் நிறைவு
அ்.தே குருதீபம்
ஒளி தரும் சூரியனாய் மிளிர வாழ்த்தும்

இவன் விஜய்.

## வாழ்த்துகின்றேன்!

குருதீபமே நீ வாழி பல்லாண்டு
குவலயத்தில் அறியாமையை நீக்கி
அறிவொளி ஊட்டிட உதித்தவனே!
ஆசிரியப் பெருந்தகைச் செய்திகளை
அகிலத்தில் பரப்பிட உதயமானவனே
ஆதவனைப் போல் நீயும் வாழி
இருபத்தைந்தாவது இதழாய்
இன்று உதிக்கின்றாய் நீயும்
இருளகற்றி ஒளியதைப் பரப்பியே
அறிவு திறன் மனப்பாங்கினை
அனைவரிடமும் மாற்றிடும் இதழாய்
அகவை பல கண்டே வாழி!

கலாநிதி எஸ்.பத்மராஜா
சிரேஷ்ட விரிவுரையாளர்.

This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd May 2021

## வாழிய பல்லாண்டு!



செல்வி விக்னேஷ்வரி கந்தசாமி
முதுநிலை விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

கல்வியெனும் ஆழியின் முத்தானவள்
கவின் கலையருவியின் சொத்தானவள்
சொல்லரும் பணியில் மலையானவள்
சோதியென ஜெகம் புகழ வலம் வருபவள்
தொல் புகழ் அறிவியல் தத்துவக் கலைகள்
அத்தனையும் புகட்டித் தரும் வித்தகியே
தமிழோ டாங்கில சிங்கள மொழிகளில்
பயிற்றிடும் சீரிளமைப் பொலி கன்னிகையே
புதிய பழைய கலைகள் காத்து
புதுமை ஆக்க விதைகள் விதைத்து
பதியமிட்டு பாதுகாக்கும் தமிழ்ப்
பரம்பரையை உருவாக்கி யென்றும்
மும்மதம் போற்றியே நிதமும் வழிகாட்டிடும் ஞான
அகல் விளக்கே எங்கள் கல்லூரித் தாயே-
தமிழ்ப் பண்பாட்டின் வீரம் மானம் கல்விப்
பாதைதனை வகுத்திட்ட நாயகியே
துணிவு நேர்மை தொழிலின் தூய்மை
துன்பத்தைத் தாங்கும் வலிமை
பணிவு அன்பு எவரையும் சமனென
பரவிடும் நீதியின் பார்வை
அணிசெய் பெரியோர் கற்றோர் மற்றோர்
அரவணைத்தேகிடும் நீர்மை
கணிக்கும் வாய்மை நோக்கு
கற்றுத்தந்த நாமகள் உறைவிடமே-நீ
வித்தக விநாயக அருளோடும்
முடிமன்னர் வைரவர் துணையோடும்
வண்ணத் தமிழின் சுவைபோலும்
வளருமிளங் கதிரவன் போலும்
நிலைத்த பூமி உள்ள வரை
நின்புகழ் பாரினில் ஓங்கிடவே
பல்கலைக்கழகமாய்ப் பரிணமித்தே
பல்லாண்டு வாழிய வாழியவே!

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி நடத்தும் இசைச் சங்கமம் இணைய வழிப் போட்டி நிகழ்ச்சியின் சுற்றுப் போட்டிகள் யாவும் 02.04.2021 உடன் நிறைவடைந்தன... இறுதிப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி வாகை சூடக் காத்திருக்கும் போட்டியாளர்கள் விபரம் வெளியாகியது...**





**ஏனைய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்று நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ளகப் பயிற்சிக்காக நியமிக்கப்பட்ட மாணவ ஆசிரியர்களைப் பார்வையிடும் பணிகளை எமது ஆசிரிய கல்வியியலாளர்கள் ஆரம்பித்தனர் - 06.04.2021**



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "குருதீபம்" செய்திமடலின் 25வது சிறப்பிதழ்! 19வது கல்லூரி தினத்தில் தனது முதலாவது இதழை முகிழ்த்த குருதீபம் இன்று 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

## கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற பங்குனித் திங்கள் உற்சவத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்தினர் - 12.04.2021



## சித்திரத் துறை மாணவ ஆசிரியர்களின் வித்தகத்தில் உருவான புத்தாண்டு வாழ்த்து மடல்கள் - 13.04.2021





## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மிக எளிமையாகக் கொண்டாடப்பட்ட சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டம் - 14.04.2021



## Zoom தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கலாச்சார மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் - 15.04.2021



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் இஸ்லாமிய மன்றத்தினரால் நடத்தப்படும் பல்வேறு போட்டி நிகழ்ச்சிகள் - 20.04.2021




This News letter was published by Jaffna National College of Education, Kopay on 02nd May 2021

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "குருதீபம்" செய்திமடலின் 25வது சிறப்பிதழ்! 19வது கல்லூரி தினத்தில் தனது முதலாவது இதழை முகிழ்த்த குருதீபம் இன்று 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

## நிகழ்நேரக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் கல்லூரியின் ஏனைய பணிகள் தொடர்பாக ஆசிரிய கல்வியியலாளர்களுடனான கலந்துரையாடல் - 21.04.2021









## நிகழ் நேரக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பாக இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்களுடன் கலந்துரையாடல்கள் Zoom தொழிநுட்பத்தினூடாக மேற்கொள்ளப்பட்டன - 22.04.2021



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்

இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்களுடனான Zoom
தொழிநுட்பத்தினூடான கலந்துரையாடல்

காலம் : 22.04.2021
வியாழன்

தலைமை
திரு. சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

கருத்துரை
செல்வி செ.செல்வமலர்
உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.


மாணவ ஆசிரியர் குழுக்கள் மற்றும் நேரம்

- ஆங்கிலம், ஆங்கில மொழி மூலமான கணிதம் மற்றும் விஞ்ஞானப் பிரிவு 9.30 a.m. – 10.00 a.m
- ஆரம்பப் பிரிவு, விசேட கல்வி மற்றும் சித்திரம் 10.15 a.m. – 10.45 a.m
- விஞ்ஞானம் (தமிழ் மொழி) மற்றும் சங்கீதம் 11.00 a.m. – 11.30 a.m
- கணிதம் (தமிழ் மொழி) மற்றும் நடனம் 11.45 a.m. – 12.15 a.m


- நிகழ் நேரக் கற்றல் - கற்பித்தல்கள் மற்றும் அவற்றிற்கான வசதிகளை ஏற்படுத்தல் தொடர்பாக மிக முக்கியமான கலந்துரையாடல் மேற்கொள்ளப்படவுள்ளதால் மாணவ ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்வது கட்டாயமானது.
- பொறுப்பு விரிவுரையாளர்கள் மற்றும் பாடங்களுக்குப் பொறுப்பான விரிவுரையாளர்கள் குறிப்பிட்ட கலந்துரையாடலில் இணைந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

Zoom Meeting ID : 849 7210 0269
Passcode : JNCoE

## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆங்கில மன்றத்தின் நிகழ்ச்சிகள் - 23.04.2021




## விரிவுரையாளர்களான திரு.பொ.விஜயகுமார் மற்றும் திரு.கே.உதயசந்தர் ஆகியோரின் வழிகாட்டலில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் மாணவ ஆசிரியர்களுக்கான இலத்திரனியல் செயலமர்வுகள்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் "குருதீபம்" செய்திமடலின் 25வது சிறப்பிதழ்! 19வது கல்லூரி தினத்தில் தனது முதலாவது இதழை முகிழ்த்த குருதீபம் இன்று 21வது கல்லூரி தினத்தில் 25வது இதழாக மலர்ந்து மணம் பரப்புகின்றது.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள President's garden ஐ பீடாதிபதி உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்ட வேளையில் - 26.04.2021



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியினால் நடத்தப்பட்ட தொழிலாளர் தின சிறப்பு நிகழ்ச்சி – 01.05.2021




கல்லூரி தினம் - மே 02, 2021 ஐ முன்னிட்டு மாணவ ஆசிரியர்களினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டம்




செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு மாணவ ஆசிரியர் - 01.05.2021












செயற்றிட்டத்தின் நோக்கம்!

